# 19-05-2024 செய்தி

## பருவநிலை மாற்றம் மூளையை பாதிக்கும்: 'லான்செட்' ஆய்விதழில் தகவல்

- பருவநிலை மாற்றமானது ஒற்றைத் தலைவலி மற்றும் அல்சைமர் போன்ற மூளை சம்பந்தப்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவரின் ஆரோக்கியத்தில் எதிர்மறை பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என லான்செட் நரம்பியல் இதழ் வெளியிட்ட புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது.
- பருவநிலையில் ஏற்படும் பெரிய மாற்றங்கள் மூளை சம்பந்தப்பட்ட நோய்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.
- இரவு நேர வெப்பநிலை முக்கியமானதாக இருக்கலாம். ஏனெனில், இரவின் வெப்பநிலை அதிகரிப்பு, தூக்கத்தைச் சீர்குலைக்கும்.
- தூக்கம் பாதிப்பு பல மூளை சம்பந்தப்பட்ட நோய்களுக்கு வழிவகுக்கும்.
- வெப்பநிலை குறித்த கவலை மற்றும் மனச்சோர்வு கூடுதல் பாதிப்பை ஏற்படுத்தும். ஏனெனில், பெரும்பாலான மூளை சம்பந்தப்பட்ட நோய்கள் கவலை மற்றும் மனச்சோர்வால் ஏற்படும் மனநோய்களாகவே உள்ளன.
- இது பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை மேலும் மோசமடையச் செய்வதுடன் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதிலும் சிக்கல்களை ஏற்படுத்தும்.

## உணவு பதப்படுத்தும் தொழில் கடன் இலக்கை எய்தி தமிழகம் முதலிடம்

- பிரதமர் உணவு பதப்படுத்தும் தொழில் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் நான்கு ஆண்டுகளில் 11,700 நபருக்கு, 610 கோடி ரூபாய் கடன் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.
- இதன் வாயிலாக, நாட்டில் மத்திய அரசு நிர்ணயித்த இலக்கை எட்டியதில், தமிழகம் முதலிடத்தை பிடித்துள்ளது.
- மத்திய அரசு, உணவு சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களை ஊக்குவிக்க, பிரதமர் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது.

**மானியம்**

- அதை, தமிழகத்தில் செயல்படுத்தும் மூகமையாக, குறு, சிறு, நடுத்தர தொழில்துறையின்கீழ் இயங்கும் உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி நிறுவனம் உள்ளது.
- இந்நிறுவனம், ஊட்டச்சத்து மாவு, மசாலா வகைகள், நறுமண பொருட்கள் உள்ளிட்ட தொழில் துவங்கவும், மேம்படுத்தவும் மானியத்துடன் கூடிய கடன் வழங்குகிறது.
- அதன்படி, தனிநபர், மகளிர் குழுக்கள் தொழில் துவங்க இயந்திரங்கள் மதிப்பில், 35 சதவீதம் அல்லது 10 லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது.
- வேளாண் உற்பத்தி அமைப்புகள், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பினர், பொது கட்டமைப்பு வசதி ஏற்படுத்த கூடுதல் மானியம் வழங்கப்படுகிறது.
- மொத்த மானியத்தில் மத்திய அரசு 60 சதவீதமும்: தமிழக அரசு 40 சதவீதமும் வழங்குகின்றன.
- நிர்ணயிக்கப்பட்ட இலக்கில், 96 சதவீதம் பூர்த்தி செய்து தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- தமிழகத்தில் நிதியாண்டில், 7,550 பேருக்கு கடன் வழங்க திட்டமிடப்பட்டது. அதை விட அதிகமாக 7, 729 நபருக்கு 39.1 கோடி ரூபாய் கடன் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.
- கடன் பெற்ற பலரும் சிறுதானியங்களை பயன்படுத்தி ஊட்டச்சத்து உணவு பொருட்கள் தயாரிப்பது உள்ளிட்ட தொழில்களை துவங்கியுள்ளது.

**முதல் ஐந்து இடம் பிடித்த மாநிலங்கள்**

| மாநிலம் | பயனாளிகள் இலக்கு | கடன் வழங்க ஒப்புதல் | சதவீதம் |
|---|---|---|---|
| தமிழகம் | 12,128 | 11,675 | 96 |
| தெலுங்கானா | 5,992 | 5,732 | 96 |
| பீஹார் | 16,233 | 13,302 | 82 |
| கேரளா | 4,393 | 3,455 | 78 |
| மஹாராஷ்டிரா | 22,234 | 16,177 | 73 |